திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பட்ஜெட்டை உரையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாடுகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவரப்படும் என்ற உருதிப்பாட்டைக் கூறவில்லை. பட்ஜெட் உரையில் கூறுமல் இருந்தாலும், நடைமுறை ஆண்டில் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் சொல்லாவிட்டாலும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

Scale of pay of Stockmen (Kanyakumari district)

* 76 Q.—SRI A. SWAMIDHAS (on behalf of SRI A. KUNJAN NADAR) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any representation regrading the fixation of salary of stockmen in Kanyakumari district, transferred from the erstwhile Travancore-Cochin State;

(*b*) if so, the reason for the delay in fixing their salary; and

(*c*) whether any steps are being taken for the recovery of the excess salary paid to them under the Integration Order?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) As the particulars regarding the fixation of pay received from the Director of Animal Husbandry were found defective and incomplete, further particulars have been called for and they are awaited.

(*c*) Yes, Sir.

Mavali tank (construction of dam)

* 77 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a dam at Mavali tank, in Tirupattur taluk, Ramanathapuram district; and

(*b*) if so, when?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Board's proposals have just been received and are under examination of the Government.

இலவசக் கல்லூரிப் படிப்பு.

* 79 கேள்வி.—திரு. அ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா மாணவர்களுக்கும் கல்லூரி படிப்பு வரை இலவசமாக படிக்க ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

2nd July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இப்பொழுது உயர்நிலைப் பள்ளி வரையிலும் இலவசப் படிப்பு இருந்து வருகிறது. அதற்கு 1,500 ரூபாய் வரையிலும் வருமான கட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லாத காரணத்தால், அதை 1,800 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது, இரண்டு நாட்களுக்கு முன்புதான் வரவு செலவுத் திட்டத்திலே 1,500 ரூபாய் வரையில் உயர்த்தியிருக்கிறோம். பின்னர் கல்வி பற்றிய விவாதம் வரும்பொழுது இதைப்பற்றி பேசலாம். இப்பொழுது, உடனடியாக 2,000 ரூபாய் வரையிலும் உயர்த்துவதாக உத்தேசம் இல்லை.

Sugarcane cess (refund)

* 80 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government of India have requested this Government to refund the cane cess collected from sugar factories for sugar exported?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

திரு. வை. சங்கரன் : ஏற்கெனவே வாங்கியிருக்கும்படியான ரிபேட்டை திருப்பிக்கொடுப்பதற்கு யோசனை கூறியிருக்கும் பொழுது மேற்கொண்டு ஒரு டன்னுக்கு 5 ரூபாய் என்று போடப் பட்டிருக்கிறது. அதனுடைய விளைவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது மேற்கொண்டு ஒரு டன்னுக்கு ரூபாய் 5 போட்டிருப்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. இதர மாகாணங்களைவிட இங்கே சர்க்கரை பாக்டரிகள் லாபத்தில் ஓடுகின்றன. ஏற்கெனவே குறைவாக விதித்திருக் கிறோம். அதைப் பார்த்துத்தான் அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த கரும்பு செஸ் சம்பந்தமாக ரீபண்டு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து வந்ததற்கு நம்முடைய சென்னை சர்க்கார் அதை மறுத்ததாகச் சொல்லப்பட்டது. அப்படி இதைத் திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னதற்கு காரணங்கள் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கரும்பு செஸ்ஸைக் கொண்டு இன்னும் கரும்பு உற்பத்தி செய்கிற பகுதிகளில் டெவலப்மென்ட் வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. திருப்பிக் கொடுத்தால் 2 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கும். அதைக்கொண்டு இந்த வேலைகள் செய்வதால் திருப்பிக்கொடுக்க முடியாது என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம்.